பிரஸார் பாரதி

<u>அகில இந்திய வானொலி, சென்னை-4</u>

08 10 2023 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தீவிரவாத தாக்குதலால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள இஸ்ரேல் நாட்டுக்கு இந்தியா துணை நிற்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. எந்தவொரு சூழலையும் எதிர்கொள்ளும் வகையில் அதிரடி விரைவுப்படையின் செயல்பாடுகள் வலுவுடன் உள்ளது என்று உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த் ராய் தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாடு — கர்நாடக மாநில எல்லையில் உள்ள பட்டாசு கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த தமிழகத்தைச் சேர்ந்த 13 பேரின் குடும்பங்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

4. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சிக்கிம் மாநிலத்தில் சேதங்களை மதிப்பீடு செய்வதற்காக அமைச்சகங்களுக்கு இடையேயான குழு இன்று நேரில் ஆய்வு செய்கிறது.

5. உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

- இனி விரிவான செய்திகள் -

**<<<<>>>>**

தீவிரவாத தாக்குதலால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள இஸ்ரேல் நாட்டுக்கு இந்தியா துணை நிற்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவிட்டுள்ள அவர், இந்த தீவிரவாத தாக்குதல் சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவத்தால் உயிரிழந்த அப்பாவி மக்களின் குடும்பங்களுக்கு தாம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அந்நாட்டில் வசித்து வரும் இந்தியர்கள் மிகுந்த விழிப்புடனும், பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றுமாறும் இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

அவசர கால உதவிக்கு இந்திய தூதரகத்தை தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை அங்குள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டில் இருந்து தீவிரவாதம் வேரறுக்கப்பட வேண்டிய தருணம் இது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் நடைபெற்ற அகில இந்திய காவல்துறை அறிவியல் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாத செயல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான உத்திகள் வகுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும் வகையில் சட்டம்-ஒழுங்கு, உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் எல்லையோர பாதுகாப்புகள் வலுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

கடந்த 9 ஆண்டுகளில் மத்திய அரசு மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகள் காரணமாக ஜம்மு-கஷ்மீர் மற்றும் நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாத செயல்கள் குறிப்பிடத்தக்க அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் குறைந்து வளர்ச்சிப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு வருவதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

எந்தவொரு சூழலையும் எதிர்கொள்ளும் வகையில் அதிரடி விரைவுப்படையின் செயல்பாடுகள் வலுவுடன் உள்ளது என்று உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த் ராய் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று அதிரடி விரைவுப்படையின் 31-ஆவது நிறுவன நாள் நிகழ்ச்சியில் பேசிய அவர், இப்படையினருக்கு உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் ஏற்படும் கலவரத்தை கட்டுப்படுத்தும் வகையில் சிறந்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஜம்மு-கஷ்மீர், மணிப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதில் அதிரடி விரைவுப்படையினர் திறம்பட செயல்பட்டதாக அவர் கூறினார்.

கம்போடியா, லைபீரியா உள்ளிட்ட பகுதிகளிலும் நமது பாதுகாப்பு படையினர் சிறப்பாக செயல்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

லைபீரியாவில் முதல் முறையாக பெண்கள் அதிரடிப்படை இணைக்கப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், தேசிய பேரிடர் மீட்பு படையிலும் பெண்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் திரு நித்யானந்த் ராய் கூறினார்.

**<<<<>>>>**

அடுத்த 25 ஆண்டுகளில் உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுக்கும் வகையில் அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு பங்களிக்கும் வகையில் மாணவர்கள் தங்களது திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கேட்டுக்கொண்டுள்ளார்.

புனேயில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரவியல் தொடர்பான தொழில்நுட்பம் உலகளவில் வளர்ச்சியடைந்து வருவதாகவும் அதற்கேற்ப மாணவர்கள் தங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களை தொழில்முனைவோராக உருவாக்கும் வகையில் தேசிய கல்விக்கொள்கை அமைந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

**<<<<>>>>**

அசாமில் 6 புதிய ஆயுஷ் மருத்துவமனைகள் ஏற்படுத்தப்படும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

மஜூலியில் 50 படுக்கை வசதிகளுடன் கூடிய ஆயுஷ் மருத்துவமனையை அவர் நேற்று திறந்து வைத்துப் பேசினார்.

இதேபோன் வசதிகளுடன் கூடிய ஆயுஷ் மருத்துவமனைகள் **Kaliabor, Marigaon, Kokrajhar** மற்றும் **Baksa** பகுதிகளில் அமைக்கப்படும் என்று அவர் கூறினார்.

அசாமில் இதுவரை 289 ஆயுஷ் சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்கள் செயல்பாட்டில் உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

**<<<<>>>>**

தமிழ்நாடு – கர்நாடக மாநில எல்லையில் இயங்கி வந்த பட்டாசு கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த தமிழகத்தைச் சேர்ந்த 13 பேரின் குடும்பங்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தமக்கு மிகுந்த மனவேதனை அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து குறித்து கர்நாடக மாநில தலைமைச் செயலாளரை தொடர்பு கொண்டு பேசியதாக அவர் தெரிவித்துள்ளார்.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு உறுதுணையாக இருக்குமாறு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர், வருவாய் மற்றும் காவல்துறை அதிகாரிகளை தாம் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

**<<<<>>>>**

சிக்கிம் மழை வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30ஆக அதிகரித்துள்ளது.

81 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக அம்மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் கூறியுள்ளது.

ஆயிரத்து 173 வீடுகள் சேதமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

13 பாலங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் அம்மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மேகனம் மாவட்டத்தில் உள்ள நாகா பகுதிகளை அம்மாநில முதலமைச்சர் திரு. பிரேம்சிங் தமங் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மாநில அரசு வழங்கும் என்று அம்மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

200க்கும் அதிகமானோர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சிக்கிம் மாநித்தில் சேதங்களை மதிப்பீடு செய்வதற்காக அமைச்சகங்களுக்கு இடையேயான குழு இன்று ஆய்வு செய்கிறது.

இது தொடர்பாக உள்துறை இணையமைச்சர் திரு. அஜய்குமார் மிஸ்ரா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வெள்ள நிலைமை குறித்து மத்திய அரசு தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும், அம்மாநில அரசுக்குத் தேவையான உதவிகளை மத்திய அரசு வழங்கும் என்றும் கூறினார்.

**<<<<>>>>**

ஆஃப்கனிஸ்தானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 120 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஈரான் எல்லையை ஒட்டிய மேற்கு ஆஃப்கனிஸ்தான் பகுதியில் ஹெராத் நகரில் இருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6 புள்ளி 3ஆக பதிவாகியுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு பேரிடர் மேலாண்மை ஆணைய தலைவர் திரு. மோசா ஹசாரி, இந்த நிலநடுக்கம் 3 முறை உணரப்பட்தாகவும், பல்வேறு கட்டிடங்கள் சேதமடைந்ததாகவும் தெரிவித்தார்.

**<<<<>>>>**

மாணவர்கள் எவ்வாறு போட்டித் தேர்வுக்கு தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது குறித்து திருவனந்தபுரம் பத்திரிகை தகவல் அலுவலக கூடுதல் தலைமை இயக்குநர் திரு. வி. பழனிசாமி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற போட்டித் தேர்வுகள் குறித்த விழிப்புணர்வு முகாமில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

**<<<<>>>>**

உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இன்று இந்தியா – ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெற உள்ள இப்போட்டி பிற்பகல் 2 மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக தரம்சாலாவில் நேற்று நடைபெற்ற ஆஃப்கனிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 6 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷ் வெற்றி பெற்றுள்ளது.

தில்லியில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் இலங்கையை 102 ரன் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்க அணி வென்றது.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி – கேரள அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் மோகன் பஹன் அணி – சென்னை அணியையும், கோவா அணி – ஒடிசா அணியையும் வென்றன.

**<<<<The End>>>>**